


08.09. 2026 – 13.45 PM

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் போக்குவரத்து தளவாட பிரிவுகளில், ஆக்கப்பூர்வமான மாற்றங்களால் சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- தமிழக சட்டப்பேரவையிலிருந்து திமுக உறுப்பினர்கள் அவைக்காவலர்களால் இன்று வெளியேற்றப்பட்டனர்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பில் திறந்த வெளி பதிவு முறை கைவிடப்பட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் அரசினர் தீர்மானம் பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- தமிழக அரசு ஊழியர்கள் வீடுவாங்க முன்பணம் பெறுவதற்கான நடைமுறைகள் இலகுவாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் செயல்படுத்தப்படும் என்று, மாநில நிதியமைச்சர் திரு.மாரியவில்சன் தெரிவித்தார்.

- மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான முன்னேற்பாட்டு பணிகள் தொடங்கியுள்ளன. இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

நாட்டின் போக்குவரத்து தளவாட பிரிவுகளில், துரிதமான ஆக்கப்பூர்வமான மாற்றங்களால் 2 ஆயிரத்து 800 கிலோமீட்டர் நீள சரக்கு போக்குவரத்து வழித்தட பணிகள் செயலாக்கத்திற்கு வந்துள்ளதாக

பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் வதோதராவில் 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து பேசிய பிரதமர், 21வது நூற்றாண்டுக்கு தேவையான வரலாற்று சிறப்பு மிக்க சாதனை வளர்ச்சிகள் நிலைநாட்டப்பட்டிருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

2006ம் ஆண்டு நாட்டின் சரக்கு வழித்தடத்திற்கான திட்டங்கள் தொடங்கப்பட்ட போதிலும், 2014ம் ஆண்டு வரை இதுசார்ந்த பணிகளில் தேக்க நிலை காணப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஆனால், 2014ம் ஆண்டு, தாம் பதவியேற்ற பின்னர் இதுசார்ந்த பணிகளை விரைவுபடுத்தி, நாட்டின் தளவாட சூழலில், ஆக்கப்பூர்வமான முத்திரையை படைத்ததாக எடுத்துரைத்தார். இதன் மூலம் போக்குவரத்து துறை எழுச்சி பெற்றதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

************

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவையிலிருந்து திமுக உறுப்பினர்கள் பேரவைத்தலைவரின் உத்தரவிற்கேற்ப அவைக்காவலர்களால் இன்று வெளியேற்றப்பட்டனர்.

சட்டப்பேரவை இன்று கூடியதும், திமுக கொறடா திரு.எ.வ.வேலு பேச பேரவைத்தலைவர் திரு.ஜே.சி.டி.பிரபாகர் அனுமதி அளித்தார்.

அதனை தொடர்ந்து பேசிய திரு.எ.வ.வேலு நேற்றைய தினம் தங்களை பேச அனுமதித்திருந்தால், சொல்லவேண்டிய கருத்துக்களை தெரிவித்து வெளிநடப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்று குறிப்பிட்டார்.

அவையில் இல்லாதவர்களை பற்றி முதலமைச்சர் நேற்று பேசியது மரபல்ல என்றும், எந்த குற்றச்சாட்டிற்கும் ஆதாரம் இருப்பதாக சர்க்காரியா கமிஷன் சொல்லவில்லை என்றும் கூறினார்.

அமலாக்கத்துறை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் நீதிமன்றத்தில் இருப்பதால், அதுகுறித்தும் பேசியது மரபல்ல என்றார் .

எனவே முதலமைச்சரின் ஆட்சேபகரமான கருத்துக்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் திரு.நிர்மல்குமார், 6 குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இருப்பதாக சர்க்காரியா கமிஷன் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து திமுக உறுப்பினர்கள், அவைக்குறிப்பிலிருந்து முதலமைச்சரின் பேச்சை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி, கோஷங்கள் எழுப்பியவாறு காணப்பட்டனர்.

சிலர் பேரவைத்தலைவரை முற்றுகையிட்டு, கோஷங்களை எழுப்பினர்.

இச்சூழலில், அவை நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக கூறி, அவை முன்னவர் திரு.கே.எ.செங்கோட்டையன், திமுக உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

இதனை தொடர்ந்து பேரவைத்தலைவர், திமுக கொறடா திரு.எ.வ.வேலுவை மீண்டும் பேச அனுமதிப்பதாக கூறியும், திமுக உறுப்பினர்கள் முதலமைச்சரின் பேச்சை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கோஷம் தொடர்ந்து எழுப்பியதால், அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும் படி அவைக்காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து காவலர்கள் உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றனர்.

************

சாதிவாரி கணக்கெடுப்பு

2027ம் ஆண்டின் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் திறந்தவெளி பதிவு முறையை முழுமையாக கைவிட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் அரசினர் தீர்மானம் பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது,

இந்த தீர்மானத்திற்கு, அஇஅதிமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், பாமக, பிஜேபி கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

************

போக்குவரத்து அமைச்சர்

தமிழ்நாட்டில் அரசு பேருந்து பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பேருந்துகளின் நிகழ்நேர கண்காணிப்பை மேம்படுத்தவும் 13 ஆயிரத்து 490 அரசு பேருந்துகளில் வாகன இருப்பிட கண்காணிப்பு கருவி மற்றும் அவசர உதவி பொத்தான்கள் 18 கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.விஜய்தமிழன் பார்த்திபன் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கையில் இன்று உரையாற்றிய அவர், பொது தனியார் கூட்டாண்மை முறையில் நவீன பயணிகள் வசதிகள் மற்றும் வணிக பயன்பாடுகள் உருவாக்கப்படும் என்றார்.

மாநகர் போக்குவரத்து கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பணிமனையில், 40 பேருந்துகளில் எரிபொருள் சென்சார் மற்றும் சக்கர காற்றழுத்த கண்காணிப்பு அமைப்பு முன்னோடி திட்டம் 14 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்றார்.

சாலை விபத்துக்களையும் உயிரிழப்புகளையும் குறைக்கும் வகையில் 10 ஆயிரத்து 524 புறநகர் பேருந்துகளின் இருபுறங்களிலும் பக்கவாட்டு பாதுகாப்பு அரண்கள் 15 கோடியே 79 லட்ச ரூபாய் செலவில் பொருத்தப்படும் என்றார்.

போக்குவரத்து கழகங்களில் சிறப்பாக பணியாற்றும், 8 ஓட்டுனர்கள் 8 நடத்துனர்கள் என 16 பேருக்கு, ஆண்டுதோறும் தலா 50 ஆயிரம் ரூபாய் ரொக்க பரிசும் விருதும் வழங்கும் திட்டம், 10 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்றார்.

அரசு போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் 42 ஆயிரத்து 114 ஓட்டுனர்களுக்கு ஆண்டுதோறும் முழுமையான சுகாதார பரிசோதனை, இலவசமாக நடத்தப்படும் என்றார்.

..........

மரியவில்சன்

தமிழக திட்டக்குழுவில் சுகாதார ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு.மரியவில்சன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று நிதி, திட்டம் வளர்ச்சி துறை மானியக்கோரிக்கைகளை தாக்கல் செய்து பேசிய அவர், அதிகாரப்பூர்வமான கொள்கை உருவாக்கம் மற்றும் திறன்மிக்க நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் ஆளுகைக்கான அலகு அமைக்கப்படும் என்றார்.

நிதித்துறையில் அறிவு திறனை மேம்படுத்தும் நோக்கில் புகழ்பெற்ற நிறுவனங்களின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

அரசு ஊழியர்கள் வீடு வாங்குவதற்கான முன்பணம் பெறுவதற்கான நடைமுறைகள், எளிமையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயல்படுத்தப்படும்.

பாதுகாப்பான வருடாந்திர நேர்காணலுக்காக, ஓய்வூதியதாரர் சுயசேவை முனையம் நிறுவப்படும் என்றார்.

இலங்கை தமிழர் குழந்தைகளுக்கு உயர்கல்வி உதவித்தொகை, மேலும் இரண்டாயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

பொதுநல நோக்கில் உதவிகளை செய்துவரும், அயலக தமிழர்களுக்கு வெற்றித்தமிழர் விருது வழங்கப்படும்.

முன்னாள் படைவீரர் மற்றும் கணவனை இழந்த பெண்களுக்கான மாதாந்திர நிதியுதவி, ஆறாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் பல்வேறு நிர்வாக பணிகளுக்கான ஒருங்கிணைந்த வலைதள செயலி 38 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

************

இடைத்தேர்தல்

தமிழ்நாட்டில் காலியாக உள்ள மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளதையடுத்து, இத்தொகுதிகளில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் முழுவீச்சில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மதுராந்தகத்தில் இடைத்தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வீரப்பன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்,

தேர்தல் முன்னேற்பாட்டு பணிகள் குறித்தும் வேட்பாளர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதியில் விதிமீறல்களை கண்காணிக்க, தலா 9 பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழுக்கள் மற்றும் இரண்டு வீடியோ கண்காணிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சித்தலைவருமான திரு.மணீஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்.

பிரச்சாரத்திற்கு உரிய அனுமதி பெற வேண்டும் என்றும், உரிமம் பெற்ற துப்பாக்கிகளை காவல்நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும் என்றும் அmவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்ட தடையை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கின் இறுதி விசாரணை வரும் 28ம் தேதி நடைபெறும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

************

வேலூர் மாவட்டத்தில் விவசாயிகள் மானியத்தில் மின்மோட்டார் பம்ப் செட்டுகள் அமைக்கும் திட்டத்தில் பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி.லீலா அலெக்ஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

அந்தந்த வேளாண் உதவி செயற்பொறியாளர் அலுவகத்தை அணுகுமாறு எமது செய்தியாளர் கூறுகிறார்.

- வாய்ஸ் –

************

நாகை

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலாயத்தில், மாதாவின் பிறந்தநாளையொட்டி, சிறப்பு திருப்பலி இன்று நடைபெற்றது.

மாதா திருக்கொடியிறக்கும் நிகழ்ச்சி இன்று மாலை நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

காவிரி

காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம் இதன தலைவர் திரு.எஸ்.கே.ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

கர்நாடக அணைகளில் நீரின் அளவு குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுவதோடு, தமிழக அரசு சார்பில், கூடுதல் நீர் திறந்துவிட கோரிக்கை வைக்கப்பட உள்ளது.

இதனிடையே, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 8 ஆயிரத்து 558 கனஅடியாக குறைந்துள்ளது.

காவிரி டெல்டா பாசனத்திற்கு 12 ஆயிரம் கனஅடியும், கிழக்கு மேற்கு கால்வாய்களில், 400 கனஅடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு ஏழாயிரத்து 500 கனஅடியாக குறைந்துள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மேற்கு கால்வாய்களுக்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் இன்று எடப்பாடி அருகே பில்லுக்குறிச்சி பகுதிக்கு வந்தடைந்த தண்ணீரை விவசாயிகள் மலர்தூவி வரவேற்றனர்.

************

கிரிக்கெட்

ஆசியக்கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில், துபாயில் இன்றிரவு நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் – ஐக்கிய அரபு எமிரேட்சை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றி பெறும் அணி, நாளை மறுநாள் நடைபெறும் முதல் அரையிறுதியில், இந்தியாவுடன் மோதும்.

************

ஆசியக்கோப்பை இளையோர் ஆடவர் ஹாக்கி போட்டியில், இந்தியா – தென்கொரியாவை 7-3 என்ற கோல் கணக்கில் இன்று வென்று அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பை தக்க வைத்துக்கொண்டுள்ளது.

இதுவரை நடைபெற்ற 3 போட்டிகளில் 7 புள்ளிகளை பெற்றுள்ள நிலையில், நாளை சீன தாய்ப்பேயுடன் நடைபெறும் போட்டியில் வெற்றி பெற்றால், இந்தியா, அரையிறுதிக்கு தகுதிபெறும்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது